Education Quality and Accountability Office EQAO

Office de la qualité et de la responsabilité en éducation OQRE

# பெற்றோக்கான கேள்வி பதில்கள்

## 9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வு

### 1. 9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வில் என்ன சோதிக்கப்படுகின்றன?

*ஒண்டாரியோ கல்வித்திட்டம்* (The Ontario Curriculum) -க்கு இணங்க, 9ம் வகுப்பின் இறுதிக்குள் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்படும் கணிதத் திறன்களை 9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வு மதிப்பாய்வு செய்கிறது. மதிப்பீட்டுத் தேர்வின் வெவ்வேறு பதிப்புகள் கல்வி மற்றும் பயன்பாடு சார்ந்த கணிதப் பாடத்திட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

### 2. என் பிள்ளை தனது வகுப்பில் தற்போது எழுதுகின்ற தேர்வுகளைக் காட்டிலும் 9ம் வகுப்பு EQAO மதிப்பீட்டுத் தேர்வுகள் எவ்வாறு வேறுபடுகின்றன?

வகுப்பறைத் தேர்வுகளும் EQAO தேர்வுகளும் வெவ்வேறு குறிக்கோள்களைக் கொண்டுள்ளன மற்றும் அவை வெவ்வேறு விதமான தகவல்களை வழங்குகின்றன.

**வகுப்பறைத் தேர்வுகள்**

- மாணவர்கள் குறிப்பிட்ட தகவல்களை எவ்வளவு நன்றாகக் கற்றுள்ளனர் என்பதை அளவிடுகின்றன. மேலும், இவை ஒரு குறிப்பிட்ட பாடசாலை ஆண்டு முழுவதும் நடைபெறுகின்றன;
- ஆசிரியர்கள் தங்களுடைய வகுப்பறைகளில் கற்பித்தல் உத்திகளைத் திருத்தியமைக்கப் பயன்படுத்தக்கூடிய மாணவர் கற்றல் குறித்த உடனடித் தகவல்களை வழங்குகின்றன;
- இவை ஆசிரியர்களால் சுதந்திரமாக உருவாக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு, மதிப்பெண் வழங்கப்படுகின்றன. மேலும், இவை தனிப்பட்ட மாணவர்கள் குறித்த ஆசிரியருடைய அறிவின் அடிப்படையில் தற்சார்பான தரமிடல் கூறுகளைக் கொண்டிருக்கலாம், மற்றும்
- பாடசாலைச் சபை அல்லது மாகாணம் முழுவதும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத முடிவுகளை வழங்குகின்றன.

EQAO மதிப்பீடுகள்

- ஒரு மாகாணம் சார்ந்த தரநிலைக்குத் தொடர்புடைய மாணவர்களுடைய கல்வியின் முக்கிய கட்டங்களில் அவர்களுடைய ஒட்டுமொத்த அறிவையும் திறன்களையும் அளவிடுகிறது;
- ஆசிரியர்கள், பாடசாலைகள், பாடசாலைச் சபைகள் மற்றும் மாகாணம் ஆகியவை மாணவர்களின் வளர்ச்சியைக் கண்காணிப்பதற்கும், அவர்களின் மேம்பாட்டிற்காகத் திட்டமிடுவதற்கும் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய மாணவரின் கற்றல் குறித்த வருடாந்திரத் தகவல்களை வழங்குகின்றன;
- குறிப்பிட்ட பயிற்சியை நிறைவுசெய்துள்ள தகுதிபெற்ற ஒண்டாரியோ ஆசிரியர்களால் முரண்பாடற்ற மற்றும் பாரபட்சமற்ற முறையில் மதிப்பிடப்படுகின்றது, மற்றும்
- வருடா வருடம் பாடசாலை, சபை மற்றும் மாகாணம் முழுவதையும் ஒப்பிட்டுப் பார்க்கும் வகையிலான முடிவுகளை வழங்குகின்றன.

## 3. 9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வை அனைத்து மாணவர்களும் எழுத வேண்டியது அவசியமா?

மாகாணம் சார்ந்த தேர்வுகள், *கல்வித் தரம் மற்றும் பொறுப்புடைமை அலுவலகச் சட்டத்தில் (The Education Quality and Accountability Office Act)* வரையறுக்கப்பட்டுள்ளவாறு ஒண்டாரியோவின் பொதுக் கல்வித் திட்டத்தின் அங்கமாகும். 9ம் வகுப்பு கல்வி அல்லது பயன்பாட்டுக் கணிதப் பயிற்சி வகுப்பில் பதிவு செய்துகொண்டுள்ள மாணவர்கள் அனைவரும் தொடர்புடைய EQAO மதிப்பீட்டுத் தேர்வை (கல்வி அல்லது பயன்பாடு சார்ந்தது) எழுத வேண்டியது கட்டாயமாகும்.

உள்ளூரில் உருவாக்கப்பட்ட கணிதப் பயிற்சி நெறி அல்லது கணித சிறப்பு மீட்புத் திட்டத்தில் (Math Credit Revocery Program) பதிவு செய்துகொண்டுள்ள மாணவர்கள், 9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வை எழுத வேண்டியத் தேவையில்லை.

## 4. சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு 9ம் வகுப்பு மதிப்பீட்டுத் தேர்வுகள் எவ்வாறு உதவுகின்றன?

ஒரு Individual Education Plan (தனிப்பட்ட கல்வித் திட்டம் - IEP) -இல் பயிலும் சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்டிருக்கும் மாணவர்கள், EQAO -ஆல் அனுமதிக்கப்படுகின்ற மற்றும் வகுப்பறை மதிப்பீடுகளுக்காக அவர்களுடைய வழக்கமான பயிற்சியுடன் முரண்பாடின்றி உள்ள 9ம் வகுப்பு மதிப்பீட்டுத்

தேர்வுகளில் சேர அனுமதிக்கப்படுகின்றனர். மேலதிக விவரங்களுக்கு, நீங்கள் EQAO –இன் *தங்குமிட வசதிகள் மற்றும் சிறப்பு ஏற்பாடுகளுக்கான வழிகாட்டியைப் (Guide for Accommodations and Special Provisions) பார்க்கலாம்.*

## 5. ஆங்கில மொழியைக் கற்பவர்களுக்கு 9ம் வகுப்பு மதிப்பீட்டுத் தேர்வுகள் எவ்வாறு உதவுகின்றன?

ஆங்கில மொழியைக் கற்பவர்களுக்கு, வகுப்பறை மதிப்பீடுகளுக்காக அவர்களுடைய வழக்கமான பயிற்சியுடன் முரண்பாடின்றி உள்ள 9ம் வகுப்பு மதிப்பீட்டுத் தேர்வுகளில் சிறிது சிறப்பு ஏற்பாடுகள் அனுமதிக்கப்படுகின்றன. மேலதிக விவரங்களுக்கு, நீங்கள் EQAO -இன் *தங்குமிட வசதிகள் மற்றும் சிறப்பு ஏற்பாடுகளுக்கான வழிகாட்டியைப் பார்க்கலாம்.*

## 6. விலக்களிப்புகள் அல்லது ஒத்திவைப்புகள் அனுமதிக்கப்படுகின்றனவா?

9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வானது கல்வி அல்லது பயன்பாடு சார்ந்த கணிதப் பயிற்சி நெறிக்கான கல்வித்திட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதால், எந்த விலக்களிப்பும் சாத்தியமில்லை. 9ம் வகுப்பு கல்வி அல்லது பயன்பாட்டுக் கணிதப் பயிற்சி வகுப்பில் பதிவு செய்துகொண்டுள்ள மாணவர்கள் அனைவரும் தொடர்புடைய EQAO மதிப்பீட்டுத் தேர்வை (கல்வி அல்லது பயன்பாடு சார்ந்தது) எழுத வேண்டியது கட்டாயமாகும்.

## 7. எப்போது 9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன?

முதல் அரையாண்டுப் பருவக் கணக்குப் பயிற்சி நெறிகளில் உள்ள மாணவர்கள் ஜனவரி மாதத்தில் குறித்த இரண்டு-வார காலத்தின் போது 9ம் வகுப்புக் கணித மதிப்பீட்டுத் தேர்வை எழுதுவர்; இரண்டாம் அரையாண்டுப் பருவத்தில் அல்லது முழு-வருடப் பயிற்சி வகுப்புகளில் உள்ள மாணவர்கள் ஜூன் மாதத் துவக்கத்தில் குறித்த இரண்டு-வாரக் காலத்தின் போது மதிப்பீட்டுத் தேர்வை எழுதுவர். மதிப்பீட்டுத் தேர்வுக் காலங்களின் போது ஒவ்வொரு பாடசாலையும் மதிப்பீட்டுத் தேர்வுத் திகதிகளைச் சுயமாகத் தீர்மானித்துக் கொள்ளும்.

## 8. 9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வுகள் எவ்வாறு நடத்தப்படுகின்றன?

9ம் வகுப்பு மதிப்பீட்டுத் தேர்வுகள், மாணவர்களின் வகுப்பறை ஆசிரியர்கள் உள்ளிட்ட ஒண்டாரியோ பயிற்றுநர்களால் முரண்பாடின்றி மாகாணம் முழுவதும் நடத்தப்படுகின்றன. இரண்டு மதிப்பீட்டுத் தேர்வுப் புத்தகங்கள் ஒவ்வொன்றையும்

நிறைவு செய்வதற்கு ஒரு மணிநேரம் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. மதிப்பீட்டுத் தேர்வுகளுக்கான புத்தகங்களின் உதாரணங்கள் இணையத்தளத்தில் கிடைக்கின்றன.

EQAO ஆனது இணையவழி மாகாண மதிப்பீட்டுத் திட்டத்திற்கு மாறுவதற்கான ஒரு பல்லாண்டு காலத் திட்டப்பணிக்கு மத்தியில் உள்ளது.

## 9. EQAO மதிப்பீட்டுத் தேர்வு நடைபெறும் நாளில் என் பிள்ளை பள்ளிக்கு வரவில்லை என்றால் என்னவாகும்?

9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வுகள் நடைபெறும் நாட்களில் உங்கள் பிள்ளை பள்ளிக்கு வரவில்லை என்றால், அவன் அல்லது அவள் பள்ளிக்குத் திரும்பும் போது, அனுமதிக்கப்பட்ட இரண்டு வார மதிப்பீட்டுக் காலத்திற்குள் மட்டுமே அத்தேர்வுகளை எழுதுவதற்கான ஏற்பாடுகளைப் பாடசாலையால் செய்ய முடியும். அக்குறிப்பிட்ட காலத்திற்குள் உங்கள் பிள்ளை பள்ளிக்குத் திரும்பவில்லை எனில், அவன் அல்லது அவளால் மதிப்பீட்டுத் தேர்வுகளில் கலந்துகொள்ள இயலாது.

9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வு முடிவுகளானது, மாணவர்களின் இறுதிப் பாட மதிப்பெண்களில் 30% வரையில் சேர்க்கப்படலாம் என்பதால், இந்த மதிப்பீட்டுத் தேர்வுகளில் கலந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் மாணவர்கள் அவ்வாறு கலந்துகொள்ளவில்லை என்றால், அவர்களின் ஒட்டுமொத்த தர நிலைகள் பாதிக்கப்படலாம்.

மதிப்பீட்டுத் தேர்வுகளில் கலந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் மாணவர்கள், அவ்வாறு கலந்துகொள்ளவில்லை என்றால், அவர்கள் அப்போதும் பொதுவில் வெளியிடப்படும் முடிவுகளில் சேர்க்கப்படுவார்கள். அரசு உதவிபெறும் கல்வி அமைப்பு என்பது ஒவ்வொரு மாணவருக்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதால், ஒவ்வொரு மாணவர் குறித்தும் EQAQ அறிக்கை அளிக்கிறது. ஒரு மாணவர் 9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வுகளை எழுதுவதற்கு எதிர்பார்க்கப்பட்டு, ஆனால் அவ்வாறு எழுதவில்லை என்றால், அவன் அல்லது அவள் பாடசாலைக்கு வரவில்லை என்று கருதப்படும். இதன் காரணமாக, அவன் அல்லது அவள் EQAO -இன் அறிக்கையில் எந்தத் தரவுகளையும் கொண்டிருக்க மாட்டார்கள்.

## 10. மதிப்பீட்டுத் தேர்வுகளுக்காக என் பிள்ளை எவ்வாறு தயாராக வேண்டும்?

9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வுகள் 100% *ஒண்டாரியோ கல்வித்திட்டம்* -ஐ அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதால், பிரத்தியேகமாகத் தயாராக வேண்டிய தேவையில்லை. மதிப்பீட்டுத் தேர்வுகளின் வடிவத்துடனும்,

கேட்கப்படவுள்ள கேள்விகளின் வகைகளுடன் பரிச்சயமாவதற்கு, நீங்கள் மதிப்பீட்டுத் தேர்வுகளுக்கான புத்தகங்களின் உதாரணங்களைப் பார்க்கலாம்.

## 11. EQAO மதிப்பீட்டுத் தேர்வுகளுக்கு எவ்வாறு மதிப்பெண் வழங்கப்படுகிறது?

எல்லா EQAO மதிப்பீட்டுத் தேர்வுகளிலும், பல தேர்வுகளைக் கொண்ட பதில்களுக்கு இயந்திரத்தினால் மதிப்பெண் வழங்கப்படுகிறது. 9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வுகளில் உள்ள திறந்த-பதில் கேள்விகளுக்கான பதில்களுக்கு, சிறப்பு பயிற்சி பெற்ற மற்றும் ஒரு தகுதிநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஒண்டாரியோ பயிற்றுநர்கள் மதிப்பெண் வழங்குகின்றனர். இந்தக் காணொளி எவ்வாறு EQAO தேர்வுகள் உருவாக்கப்படுகின்றன, நிர்வகிக்கப்படுகின்றன மற்றும் மதிப்பெண் வழங்கப்படுகின்றன (How EQAO Tests Are Created, Administered and Scored) என்பது குறித்து மேலும் விளக்குகிறது.

## 12. என் பிள்ளையின் முடிவுகளை நான் எப்போது பெறுவேன்?

மதிப்பீட்டுத் தேர்வுகளை எழுதுகின்ற ஒவ்வொரு மாணவரும், அடுத்தப் பாடசாலை ஆண்டின் இலையுதிர்காலத்தின் போது அவன் அல்லது அவளது முடிவுகளைத் தெரிவிக்கின்ற ஒரு Individual Student Report (தனிப்பட்ட மாணவர் அறிக்கை - ISR) -ஐப் பெறுவர். பயன்பாடு அல்லது கல்வி சார்ந்த குறித்த மேல் விவரங்களுக்கு, மாதிரி ISR -ஐப் பார்க்கவும்.

எல்லா EQAO மதிப்பீட்டுத் தேர்வுகளுக்கான மாகாண ரீதியான முடிவுகளும் கூட, மதிப்பீட்டுத் தேர்வுகளைத் தொடர்ந்து அறிவிக்கப்படுகின்றன. பாடசாலை மற்றும் பாடசாலை சபைப் பெறுபேறுகள், EQAO -இன் இணையத்தளத்தில் வெளியிடப்படுகின்றன.

## 13. EQAO முடிவுகள் எவ்வாறு அறிவிக்கப்படுகின்றன?

9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வுகள் மீதான அடைவு நிலையானது மாகாணத்தின் நான்கு அடைவு நிலைகளுக்கு இணங்க அறிவிக்கப்படுகின்றன. மாணவர்களின் அடைவு நிலையை அறிவிப்பதற்காக ஆசிரியர்கள் வகுப்பறைகளில் பயன்படுத்துகின்ற அதே நிலைகள் தான் இவை. மாகாணத் தரநிலை என்பது நிலை 3 ஆகும், இது 70 முதல் 79 வரையிலான சதவீத வரம்பில் உள்ள அடைவு நிலைக்குத் தொடர்புடையதாகும்.

மதிப்பீட்டுத் தேர்வில் தரநிலையை (அதாவது, நிலை 3 மற்றும் 4) அடைகின்ற அல்லது மிஞ்சுகின்ற மாணவர்கள், தேவைப்படும் பெரும்பாலான அல்லது

அனைத்துக் கணித அறிவையும், அவர்களுடைய கல்வியின் தற்போதைய நிலையில் எதிர்பார்க்கப்படும் திறன்களையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

## 14. என் பிள்ளையின் EQAO முடிவுகள் அவன் அல்லது அவளுடைய தகுதி நிலைகளுக்குக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா?

இந்த 9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வுகள், மாணவர்களின் இறுதிப் பாட மதிப்பெண்களில் 30% வரையில் சேர்க்கப்படலாம். மாகாண மதிப்பீட்டைச் சேர்க்கலாமா வேண்டாமா என்பதையும், எவ்வளவு சேர்க்கலாம் என்பதையும் பாடசாலைகள் மற்றும்/அல்லது பாடசாலை சபைகள் முடிவு செய்கின்றன. EQAO-க்கு தேர்வுப் பாடப் பொருட்களைத் திருப்பியனுப்புவதற்கு முன்னர், ஆசிரியர்கள் எத்தகைய மதிப்பீட்டுத் தேர்வுகளின் கூறுகளுக்கும் மதிப்பெண் வழங்கலாம்.

## 15. இதன் முடிவுகள் செல்லத்தக்கதா மற்றும் நம்பகமானதா?

ஆம். EQAO -இன் தேர்வு உருவாக்கம், கண்காணிப்பு மற்றும் தர உத்திரவாதச் செயல்முறை ஆகியவை உலகளவில் சிறந்தவையாகும். மேலும், இவை முகமையினுடைய தரவுகளின் செல்லுபடித்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிசெய்கின்றன. தேர்வுகளின் உருவாக்கம், ஆசிரியர்கள் மதிப்பெண் வழங்குதல் முதற்கொண்டு, முடிவுகளை அறிவித்தல் வரையிலான மதிப்பீட்டு சுழற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும், நம்பகத்தன்மை சரிபார்ப்புகளை EQAO நடைமுறைப்படுத்தியுள்ளது. EQAO தனது தரவுகளின் நேர்மைக்கு அதிகபட்ச முக்கியத்துவத்தை அளிக்கிறது.

## 16. என் பிள்ளையின் EQAO முடிவுகளை நான் எவ்வாறு அவன் அல்லது அவளுடைய கற்றலுக்கு உதவுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்?

மாணவர் கற்றலை மதிப்பாய்வு செய்யும் வேளையில், பல்வேறு வகையான தகவல்களைக் கருத்தில்கொள்ள வேண்டியது முக்கியமாகும். உங்கள் பிள்ளையின் அன்றாட வகுப்பறை பணி மற்றும் பிற மதிப்பீடு ஆகியவற்றுடன் சேர்த்து EQAO முடிவுகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். மேலும், அவன் அல்லது அவளுடைய கற்றல் திறனை மதிப்பிடுவதற்கும், எந்தப் பிரிவில் உதவி தேவைப்படக்கூடும் என்பதைத் தீர்மானிப்பதற்கும் சூழல் சார்ந்த தகவல்களும் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

மாகாணக் கணிதத் தரநிலையை அடையப் பெறாத மாணவர்களுக்காக, குறிப்பாக, உயர்நிலைப் பாடசாலை படிப்பு நிறைவடைவதற்கு முன்னர் எவ்வாறு அவர்களின் கற்றல் இடைவெளிகளை நிரப்புவது மற்றும் அவர்களின் அடைவு நிலையை

மேம்படுத்துவது என்பது குறித்து ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்துரையாட வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

## 17. என் பிள்ளையின் பள்ளி முடிவுகள் எனக்கு என்ன கூறுகின்றன?

உங்கள் பாடசாலைச் சபை மற்றும் மாகாணம் முழுவதும் உள்ள பள்ளிகள் தொடர்பாக உங்கள் பயிலும் மாணவர்கள் எவ்வாறு செயல்படுகின்றனர் என்பதை முடிவுகள் உங்களுக்கு காண்பிக்கின்றன. மற்ற மாணவர்கள் தொடர்பான உங்கள் பிள்ளையின் அடைவு நிலையை நீங்கள் புரிந்துகொள்ள உதவலாம். மேலும், மாணவரின் அடைவு நிலையை ஆதரிப்பது குறித்த உரையாடல்களில் பங்கேற்பதற்கு உங்களைத் தயார்படுத்தலாம்.

உங்கள் பிள்ளையின் பாடசாலையில் கற்றல் திட்டங்களைப் பலப்படுத்துவதற்கான EQAO முடிவுகளின் முக்கியத்துவம் குறித்து நீங்கள் உங்களுடைய பிள்ளையின் ஆசிரியர் அல்லது பாடசாலை அதிபருடன் பேசலாம். ஒண்டாரியோ முழுவதும் உள்ள பாடசாலைகள் தங்களுடைய மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குவதற்கு, தேர்வு அறிக்கைகள், வருகை வீதங்கள் மற்றும் சூழல் சார்ந்த தகவல்கள் போன்ற பிற வகுப்பறைத் தரவுகளுடன் சேர்த்து EQAO தரவுகளையும் பயன்படுத்துகின்றன.

## 18. என் பிள்ளை மதிப்பீட்டுத் தேர்வுகளில் வெற்றியடையவில்லை என்றால் என்னவாகும்?

மாகாணக் கணிதத் தரநிலையை அடையப் பெறாத மாணவர்களுக்காக, குறிப்பாக, உயர்நிலைப் பாடசாலைப் படிப்பு நிறைவடைவதற்கு முன்னர் எவ்வாறு அவர்களின் கற்றல் இடைவெளிகளை நிரப்புவது என்பது குறித்து ஆசிரியர்களும் பெற்றோர்களும் விவாதிக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

தேர்வு முடிவுகள் மாணவர்களின் இறுதிப் பாட மதிப்பெண்களில் 30% வரையில் சேர்க்கப்படலாம் என்பதால், 9ம் வகுப்பு கணித மதிப்பீட்டுத் தேர்வில் மாணவர்கள் வெற்றி பெறவில்லை எனில், அவர்களின் ஒட்டுமொத்த தர நிலைகள் கள் பாதிக்கப்படலாம்.

## 19. எதற்காக மாகாணம் தழுவிய மதிப்பீட்டுத் தேர்வுகள் ஒண்டாரியோக்குத் தேவைப்படுகின்றன?

ஒண்டாரியோ கல்வி அமைப்பில், EQAO முடிவுகள் பொறுப்புடைமையின் முக்கிய அளவீடாக உள்ளன. மேலும், இவை மாணவர், பாடசாலை பாடசாலை சபை மற்றும் மாகாணம் சார்ந்த நிலைகளில் மேம்பாட்டுத் திட்டமிடலுக்கான ஒரு

முக்கியக் கருவியாகும். தொடர்ச்சியான மேம்பாடு குறித்துத் தீவிரமாக இருக்கும் ஒரு பாடசாலை அமைப்பானது, பாரபட்சமற்ற மற்றும் நம்பத்தகுந்த மாணவர் அடைவு நிலையின் அமைப்பு தழுவிய சான்றைக் கொண்டிருக்க வேண்டும். மதிப்பீட்டுத் தேர்வுகளின் முடிவுகளானது, மாணவர்களுக்குக் கூடுதல் ஆதரவு தேவைப்படக்கூடிய பகுதிகளை முன்னிறுத்திக் காட்டுகின்றன. கற்பித்தல் மற்றும் கற்றல் முன்னெடுப்புகளை இலக்கிடுவதற்கு, பயிற்றுநர்கள், பாடசாலைகள் பாடசாலைச் சபைகள் மற்றும் மாகாணம் ஆகியவை இத்தரவுகளைப் பயன்படுத்துகின்றன.